ந. ரங்கசாமி
முதலமைச்சர்
புதுச்சேரி அரசு

சत्यमेव जयते

பாண்டிச்சேரி

தேதி: 22.12

## கிறிஸ்துமஸ் வாழ்த்துச் செய்தி

புதுச்சேரி மாநில மக்கள் அனைவருக்கும் குறிப்பாக கிறிஸ்துவ சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் எனது உளங்கனிந்த கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அன்பின் ஒளியாய் கருணையின் வடிவாய் அவதரித்த இயேசுபிரான் பிறரின் பாவங்களுக்காகத் தன்னையே அர்ப்பணித்தவர். தன்னை சிலுவையில் அறைந்தவர்களைக் கூட மன்னிக்கும்படி பரம பிதாவிடம் மன்றாடியவர். மன்னிப்பதன் மூலம் மன்னிக்கிறவர் மட்டுமல்லாமல், மன்னிக்கப்படுகிறவரும் உயருகிறார் என்பதற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழும் இயேசுபிரான் அவர்கள் அவதரித்த இந்தத் திருநாள், கிறிதுமஸ் விழாவாக உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

ஒவ்வொரு குடும்பமும் தன் உறவுகளோடும் நட்புகளோடும் நேசங்களைப் பகிர்ந்து கொள்கிற இது போன்ற விழாக்கள் ஒரு நாட்டின் பண்பாட்டையும் காலாச்சார உறவுகளையும் வெற்றிடமின்றி நிரப்பிட உதவுகிறது என்றால் அது மிகையில்லை.

பகைவருக்கும் அருளுகின்ற நல்லிதயம் கொண்ட புனிதர் இயேசுபிரான் அவர்கள் பிறந்த இந்தப் புனித நன்னாளில், இயேசு நாதரின் போதனைகளான, தியாகம், மன்னிப்பு, அன்பு, சகோதரத்துவம், சமாதானம், சேவை மனப்பான்மை ஆகியவற்றைக் கடைபிடிக்க நாம் அனைவரும் உறுதிபூணுவோம்.

இத்திருநாள், கிறிஸ்துவ சகோதர-சகோதரிகளின் இல்லங்களில் எல்லா வளங்களையும் நலங்களையும் கொண்டுவந்து சேர்ப்பதாக அமையட்டும் என்று கூறி, அனைவருக்கும் எனது உளங்கனிந்த கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்களை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்கிறேன்.

DEPARTMENT OF INFORMATION & PUBLICITY
GOVERNMENT OF PUDUCHERRY
PUDUCHERRY

(ந. ரங்கசாமி)

✆ அலு.: 2333399, 2335530, 2335328, 2335522 தொலைநகலி: 0413–2333135 இல்லம்: 2271232